## தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டம் (பகுதி - 07) - 2015

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டம் (பகுதி - 07) இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் நிலைபேறான எரிசக்தி அதிகாரசபைக்கு இடையில் 2013 மே 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்ஐ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) ii பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளது. இலங்கை மின்சாரசபை மற்றும் நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாக உள்ள அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் 07 ஆம் பகுதியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் அமுல்படுத்தலுக்கு பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் 07 ஆம் பகுதியின் கீழ் நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. தூய மின்சக்தி வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை வினியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகரத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 378.6 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3.00 மில்லியன் செயற்திட்டத்தின் 07 ஆம் பகுதிக்கு ஒதுக்கப்பட்டது. செயற்திட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் ஏற்பாடுகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| மூலம் | ஐ.அ.டொலர் (மில்லியன்) | இலங்கை ரூபா. (மில்லியன்) |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | |
| - ஆசிய அபிவிருத்தி நிதியம் (2013 மே 08 இன் 2892 எஸ்ஆர்ஐ இலக்க கடன்) | 30.00 | 3,786.00 |
| - சாதாரண மூலதன வளங்கள் (2013 மே 08 இன் 2893 எஸ்ஆர்ஐஎஸ்எவ் இலக்க கடன்) | 100.00 | 12,620.00 |
| - தூய சக்தி நிதியம் (2013 ஆகஸ்ட் 08 இன் 0303 எஸ்ஆர்ஐஈஎவ் இலக்க மானியம்) | 1.50 | 189.30 |
| **இலங்கை அரசாங்கம்** | 68.50 | 8,644.70 |
| | 200.00 | 25,240.00 |

2013 செப்தம்பர் 30 இல் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கும் திகதி 2019 யூன் 30 வரை நீடிப்புச்செய்யப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய

வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரணமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(எ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 19 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 01 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தலின் 19 ஆம் பந்தியினால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கு முகாமைத்துவம் பொறுப்பு என்ற கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 பல்கலைக்கழகங்களில் சூரியஒளி கூரை சக்தி உற்பத்தி ஆலைகளின் வடிவமைப்பு, விநியோகம், ஸ்தாபிப்பு, பரீட்சிப்பு மற்றும் பராமரிப்புக்கு 2015 திசெம்பர் 21 இல் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 2.92 மில்லியன் தொகை முற்பணமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றிற்கு கணக்கு வைக்கப்படாதிருந்தது.

(ஆ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் 02 கட்டுநிதிக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33.42 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் தொடர்ந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சரியான நேரத்தில் மீதிகளினை இணக்கம் செய்வதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டுவரக்கூடிய வகையில் செயற்திட்டத்தினால் அவற்றின்மீதான தொடர்புடைய பதிவுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினங்களுடன் தொடர்புடைய சில முக்கிய புள்ளிவபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான வருடாந்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடீபீ எல் 2892/2893 | 1.50 | 189.30 | 195 | - | - | - | - |
| ஏடீபீ மானியம் 303 | 1.50 | 189.30 | 100 | 0.05 | 7.5 | 0.08 | 12.0 |
| இலங்கை அரசு | 0.08 | 10.00 | 05 | 0.002 | 0.3 | 0.004 | 0.6 |
| **மொத்தம்** | **3.08** | **388.60** | **300** | **0.052** | **7.8** | **0.084** | **12.6** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், பொது தனியார் பங்குடமை உடன்படிக்கைகளின் கீழ் பொது கட்டிடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கூறை முறைமைகளின் நிறுவுகைக்கான தெரிவுகளினை உள்ளடங்கியுள்ள பரீட்சாத்த சூரியஒளி கூறை சக்தி செயற்திட்ட அமுல்படுத்தலுக்கு மற்றும் ஹோட்டல்கள், தனியார் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் போன்ற ஏனைய தனியார் நிறுவனங்களின் சூரியஒளி கூரைகளில் தனியார் துறையின் நிலைபேறான வசதியான பங்களிப்புக்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் பிரகாரம், 04 பல்கலைக்கழகங்களில் சூரியஒளி ஒளிமின்னழுத்த சக்தி உற்பத்தி ஆலைகளின் வடிவமைப்பு, விநியோகம், நிறுவுகை மற்றும் பரீட்சிப்புக்கு சேவை வழங்குனராக தனியார் கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், செயற்திட்டத்தின் பயனாளி நிறுவனங்களுக்கு நிதிசார் உதவிகளினை வழங்குவதற்கு தனியார் துறையிலுள்ள அனுமதிபெற்ற வர்த்தக வங்கியொன்றுடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அவ்வாறான எவ்வித கடன் திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.